A.Twn
Dist Vm

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

Under Section 173 BNS ~~(கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040900

1. District : மாவட்டம் Nilgiris | PS: காவல்நிலையம் VE AC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 09 | Date: நாள் 28.11.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by the — Sections பிரிவுகள்: 7(b)
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act, 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 11.11.2024 — Date to : நாள் வரை 26.11.2024
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 15.00 hrs — Time to : நேரம் வரை 13.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.11.2024 — Time : நேரம் 10.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.11.2024 — Time : நேரம் 10.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Tamil typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Jegathala Town Panchayat office about 12 km. East.
   Beat Number : முறைக் காவல் எண் – — (b) Address : முகவரி –
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A. Subash Raj kumar — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ayyasamy (late)
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2024 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Consulting Engineer — (g) Address : முகவரி No. 10/13, A.S. Raja Illam, Bella Gowder Line, Aruvankadu, the Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Saravanarajan, Executive Officer, Jegathala Town Panchayat office, Aruvankadu, the Nilgiris

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — No delay.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 28/11/2024 [signature] 28/11/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.11.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.10 hrs.

Name: பெயர் P. PARIMALA DEVI.
Rank: நிலை ......................No. எண் ..........
Inspector of Police
VE AC, the Nilgiris.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2024/AC/NI, u/s 7 (b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

இன்று 28.11.2024-ம் தேதி வியாழன்கிழமை 10.30 மணிக்கு காவல் ஆய்வாளர், P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது நீலகிரி மாவட்டம், அருவங்காடு, ஒசட்டி ரோடு, தீனா காட்டேஜ், கதவு எண்.10/213W என்ற முகவரியில் வசிக்கும் திரு.அய்யாசாமி (லேட்) என்பவரின் மகன் திரு.A.சுபாஷ் ராஜ் குமார் என்பவர் அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக புகார்தாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டதில், ஜெகதளா பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரியும் திரு.சரவணராஜன் என்பவர் புகார்தாரருக்கு கட்டிடம் கட்ட அனுமதி உத்தரவு வழங்கியதற்காக புகார்தாரரிடம் லஞ்சமாக ரூ.30,000/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து ரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், மேலும் புகார்தாரருக்கும், எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும், அவரது புகார் நம்பகத்தன்மை கொண்டது என்றும் தெரியவந்தது. மேலும் புகாரின் உண்மைதன்மையையும், நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 28.11.2024-ம் தேதி காலை 11.30 மணிக்கு நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2024/AC/NI-ல் ஊழல் தடுப்பு சட்ட

பிரிவு 7(b)-ன் படி, மேற்படி எதிரி திரு.சரவணராஜன், செயல் அலுவலர், ஜெகதளா பேரூராட்சி, நீலகிரி மாவட்டம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் A.சுபாஷ் ராஜ் குமார், வயது 46/2024, த/பெ அய்யாசாமி (லேட்), கதவு எண்.10/13, ஏ.எஸ்.ராஜா இல்லம், பெள்ளா கவுடர் லைன், அருவங்காடு, நீலகிரி. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம். ஐயா, நான் கதவு எண்.10/213W, தீனா காட்டேஜ், ஒசட்டி ரோடு, அருவங்காடு என்ற முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் Diploma in Civil Engineering படித்துள்ளேன். எனது தாயார் திருமதி.ஜீவரத்தினம் அருவங்காடு, பெள்ளா கவுடர் லைன், ஏ.எஸ்.ராஜா இல்லம், கதவு எண்.10/13-ல் உள்ள சொந்த வீட்டில் வசித்து வருகிறார். நான் உதகமண்டலம் நகராட்சி மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் கிரேடு-3 பொறியாளராக பதிவு செய்துள்ளேன். நான் கட்டிட வரைபடம், கட்டிட மதிப்பீடு தயார் செய்து கொடுத்தல் மற்றும் கட்டிட பணிகளை மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளை செய்து வருகிறேன். மேலும் கட்டிட ஒப்பந்ததாரராகவும் இருந்து வருகிறேன். நான் அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலை பிரதான நுழைவாயிலுக்கு எதிரே கேரளா விஜயா பேக்கரி காம்ப்ளக்ஸின் முதல் தளத்தில் கதவு எண்.10/106B என்ற முகவரியில் கடந்த 10 வருடங்களாக மேற்படி பணிகளுக்கான அலுவலகம் நடத்தி வருகிறேன். நான் கோத்தகிரி தாலுகா, ஜெகதளா-1 கிராமம் பழைய புல எண்.318/10, புதிய புல எண்.195/2, பட்டா எண்.1593-ல் 0.08 ஏக்கர் நிலத்தை திரு.J.B.கோபாலகிருஷ்ணன், த/பெ J.B.பெள்ளி, கதவு எண்.4/139B, ஜெகதளா கிராமம் & அஞ்சல், நீலகிரி என்பவரிடமிருந்து ரூ.3,48,800/-க்கு விலைக்கு வாங்கி குன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3220/2022-ன்படி 23.11.2022-ம் தேதி கிரையம் பதிவு செய்துள்ளேன். மேற்படி இடத்தில் 1625 சதுர அடியில் தரைதளம் மற்றும் முதல்தளத்தில் வீடுகட்ட அனுமதி வேண்டி www.nilgirisbuildingpermission.org என்ற இணையதளம் மூலம் வரைபடத்துடன் 25.01.2023-ம் தேதி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்ப எண்.2023/01/09851 ஆகும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை பதிவிறக்கம்

செய்து உரிய ஆவணங்களை இணைத்து நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். நான் விண்ணப்பம் கொடுத்து ஒரு வருடத்திற்குமேல் ஆகிவிட்டதால் விண்ணப்பத்தின் நிலை குறித்து தெரிந்துக்கொள்ள 2024-ம் வருடம் அக்டோபர் மாதம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று எனது விண்ணப்பத்தின் நிலை குறித்து விசாரித்தபோது, கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டவுடன் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படும். அதனால் இணையதளத்தில் பார்த்துகொள்ளுமாறு தெரிவித்தனர். நான் 01.11.2024-ம் தேதி என்னுடைய விண்ணப்பம் குறித்த நிலையினை தெரிந்துகொள்ள இணையதளத்தில் பார்த்தபோது, வேளாண்மை, வனம் மற்றும் புவியியல் துறையினர் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் 04.10.2024-ம் தேதி நடைபெற்ற District Level Building Plan Approval Committee கூட்டத்தில் ஒப்புதல் அளித்து நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் எண்.R.C.D10/No.20458/2017, நாள்:18.10.2024-ன்படி அனுமதி வழங்கிய விவரம் தெரியவந்தது. நான் வாங்கிய நிலத்தில் புதிய தரைதளம் மற்றும் முதல்தளத்தில் கட்டிடம் கட்ட உரிமம் பெற Building Plan Permission Service-ஐ பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்துக்கொண்டு நவம்பர் முதல் வாரத்தில் ஒருநாள் காலை சுமார் 11.00 மணிக்கு ஜெகதளா பேரூராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த கிளர்க் திரு.ராஜா அவர்களிடம் விசாரித்தேன். திரு.ராஜா என்னிடமிருந்த Building Plan Permission Service-ஐ வாங்கி பார்த்துவிட்டு கட்டிட உரிமம் பெற அரசுக்கு பணம் செலுத்த வேண்டும், Executive Officer திரு.சரவணராஜன் அவர்களை பார்க்குமாறு சொன்னார். அதன்படி நானும் திரு.சரவணராஜன் அவர்களை அவரது அறையில் சந்தித்து கட்டிட உரிமம் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் கிளர்க் திரு.ராஜா சொல்லும் பணத்தை அவரிடம் கொடுத்து அரசு கணக்கில் செலுத்திவிட்டு தன்னை வந்து பார்க்குமாறு கூறினார். நான் கிளர்க் திரு.ராஜாவிடம் எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் எதோ ஒரு பேப்பரில் கணக்கு போட்டு கொடிநாள் நிதி மற்றும் கட்டிட உரிமம் பெற மொத்தம் ரூ.72,000/- கட்டவேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் பணத்தை ரெடி செய்துவிட்டு வருகிறேன் என்று தெரிவித்தேன். பின்னர் 11.11.2024-ம் தேதி

காலை சுமார் 11.45 மணிக்கு ஜெகதளா பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று கிளர்க் திரு.ராஜா அவர்களிடம் பணம் ரூ.72,000/-ஐ கொடுத்தேன். அவர் அதை வாங்கிக்கொண்டு, பணம் கட்டி ரசீது தருவதாக சொல்லி, EO அவர்களை பார்க்கச்சொன்னார். நானும் மதியம் சுமார் 03.00 மணிக்கு EO திரு.சரவணராஜன் அவர்களை சந்தித்து கிளர்க் திரு.ராஜாவிடம் பணம் ரூ.72,000/-ஐ கொடுத்த விவரத்தை தெரிவித்தேன். அப்போது EO திரு.சரவணராஜன் அவர்கள் கட்டிடம் கட்ட அனுமதி வழங்க தனக்கு தனியாக ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என்று கூறினார். எனக்கு தொழில் சரியாக இல்லாததால் என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று தெரிவித்தேன். அதற்கு அவர் எவ்வளவு சீக்கிரம் பணத்தை கொடுக்குறீர்களோ அவ்வளவு சீக்கிரம் நானும் கட்டிடம் கட்ட அனுமதி வழங்குவேன் என்று கூறினார். பின்னர் நான் கிளர்க் திரு.ராஜாவிடம் பணம் ரூ.72,000/- செலுத்தியதற்கு ரசீது கேட்டேன். அதற்கு அவர் நாளைக்கு ரசீது தருகிறேன் என்று சொன்னார். பின்னர் 12.11.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு ஜெகதளா பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று கிளர்க் திரு.ராஜா அவர்களை சந்தித்தேன். அவர் EO இன்னும் கட்டிட அனுமதி உத்தரவில் கையெழுத்து போடவில்லை என்று சொன்னார். பின்னர் நான் 13.11.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ஜெகதளா பேரூராட்சி அலுவலகம் சென்று EO அவர்களை சந்தித்து கட்டிட உரிமம் குறித்து கேட்டேன். அதற்கு அவர் தான் கேட்ட பணம் ரூ.50,000/- கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நான் தற்போது District Level Building Plan Approval Committee-ல் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படாததால் தொழில் மந்தமாக உள்ளது. என்னால் அவ்வளவு பணம் தர இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர் மின் இணைப்பு பெற தடையில்லா சான்று, வீட்டிற்கு புதிய வரிவிதிப்பு மற்றும் குடிநீர் இணைப்பு எல்லா வேலைகளுக்கும் எங்கிட்டதான் வரணும், நான் கேட்ட பணம் ரூ.50,000/-ஐ கொடுத்தால்தான் கட்டிட அனுமதி உத்தரவு கொடுப்பேன் என்று சொன்னார். நான் ஒன்றும் சொல்லாமல் அங்கிருந்து வந்துவிட்டேன். அன்று மாலை சுமார் 06.00 மணிக்கு கிளர்க் திரு.ராஜா அவரது செல்போன் எண்.9486021268-லிருந்து என்னுடைய செல்போன் எண்.8778500986-ல்

தொடர்பு கொண்டு, பில்டிங் லைசன்ஸ் சம்மந்தமாக சுபாஷ் வந்தால், தன்னை வந்து பார்க்குமாறு EO தெரிவித்ததாக கூறினார். பின்னர் இரவு சுமார் 07.00 மணிக்கு EO திரு.சரவணராஜன் 9585222255 என்ற செல்போனிலிருந்து என்னுடைய செல்போன் எண்.8778500986-க்கு தொடர்பு கொண்டார். நான் கால் அட்டெண்ட் செய்வதற்குள் மிஸ்டு கால் ஆகிவிட்டது. பின்னர் மறுபடியும் EO அதே நம்பரிலிருந்து என்னை தொடர்புகொண்டு கட்டிட அனுமதி உத்தரவில் கையெழுத்து போட்டுவிட்டதாகவும், தான் கேட்ட பணம் ரூ.50,000/-ஐ கொடுத்துவிட்டு உத்தரவை வாங்கிக்கொள்ளுமாறு சொல்லி செல்போனை துண்டித்துவிட்டார். EO கேட்ட பணத்தை என்னால் ஏற்பாடு செய்ய முடியாததால் ஜெகதளா பேரூராட்சி அலுவலகம் செல்லவில்லை. அதன்பிறகு 16.11.2024-ம் தேதி சனிக்கிழமை EO திரு.சரவணராஜன் அவர்கள் 9585222255 என்ற செல்போன் எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண்.8778500986-க்கு மாலை சுமார் 6.30 மணிக்கு தொடர்பு கொண்டபோது நான் அழைப்பை ஏற்பதற்குள் கால் கட்டாகிவிட்டது. அதனால் நான் அதே எண்ணில் அவரை தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் ரூ.50,000/- என்னாச்சு என்று கேட்டார். என்னால் பணத்தை ரெடி செய்ய முடியவில்லையென்று தெரிவித்தேன். அதற்கு அவர் கட்டிட அனுமதி உத்தரவு வழங்கியதற்காக பணம் ரூ.50,000/-ஐ தனக்கு ஒரு வாரத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தபோது போன் கட்டாகிவிட்டது. மீண்டும் அவர் அதே எண்ணிலிருந்து என்னை தொடர்புகொண்டு கட்டிட அனுமதி உத்தரவை கிளர்க் திரு.ராஜாவிடம் வாங்கிக்கொள்ளுமாறு கூறி போனை துண்டித்தார். பின்னர் கிளர்க் திரு.ராஜா 9486021268 என்ற எண்ணிலிருந்து எனது செல்போன் எண்.8778500986-ல் தொடர்பு கொண்டு கட்டிட அனுமதி உத்தரவை தங்களிடம் EO கொடுக்கச் சொன்னார். அலுவலகம் வாருங்கள் என்று சொன்னார். அதன்படி நானும் இரவு சுமார் 07.00 மணிக்கு ஜெகதளா பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்றேன். அப்போது அலுவலகத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த திரு.ராஜா கட்டிட அனுமதி உத்தரவை என்னிடம் கொடுத்தார். நான் அதை வாங்கி பார்த்துவிட்டு 11.11.2024-ம் தேதி பணம் ரூ.72,000/- கொடுத்ததற்காக ரசீது கேட்டேன். அதற்கு அவர்

மீண்டும் ஆபிஸ் வரும்போது ரசீதை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். கட்டிட உரிம எண்.09/2024-25, நாள்:13.11.2024 ஆகும். பின்னர் 21.11.2024-ம் தேதி காலை சுமார் 08.30 மணிக்கு நான் வீட்டிலிருந்து எனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது EO திரு.சரவணராஜன் அவர்களின் 9585222255 எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண்.8778500986 இரண்டு மிஸ்டுகால் வந்தது. நான் டு வீலரை நிறுத்திவிட்டு அதே எண்ணில் அவரை தொடர்பு கொண்டபோது, அவர் என்னிடம் பில்டிங் லைசென்ஸ் மட்டும் வாங்கிட்டு போயிட்டீங்க, நான் கேட்ட பணம் ரூ.50,000/-ஐ இன்னும் கொடுக்கல என்று கேட்டார். நான் அவர் கேட்டதற்காக பணத்தை ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக தெரிவித்தேன். அதற்கு அவர் அடுத்தடுத்த வேலைகளுக்கு எங்கிட்டதான் வரணும், நான் கேட்ட பணத்தை தரலன்னா EB-க்கு NOC குடுக்கமாட்டேன். வீடு கட்டும்போது விதிமீறி கட்டுறதா சொல்லி வேலைய ஸ்டாப் பண்ணிடுவேன் என்று கண்டிப்புடன் சொல்லி போனை கட் செய்துவிட்டார். பின்னர் நான் 26.11.2024-ம் தேதி EB NOC குறித்து EO திரு.சரவணராஜன் அவர்களை சந்திப்பதற்காக காலை சுமார் 10.45 மணிக்கு ஜெகதளா பேரூராட்சி அலுவலகம் சென்றேன். அப்போது அவர் வேறு நபர்களுடன் அவரது அறையில் பேசிக்கொண்டிருந்ததால், நான் சிறிது நேரம் அங்கேயே காத்திருந்தேன். பின்னர் அவர் அவசர வேலையாக வெளியில் சென்றுவிட்டார். நான் அவரை சந்திப்பதற்காக அலுவலகத்திலேயே காத்திருந்தேன். பின்னர் மீண்டும் மதியம் சுமார் 01.00 மணிக்கு EO திரு.சரவணராஜன் அவர்கள் அலுவலகத்திற்கு வந்ததும், நான் அவரை சந்தித்தேன். அவர் என்னிடம் பில்டிங் லைசென்ஸ் கொடுத்ததற்கு நான் கேட்ட பணம் ரூ.50,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் கஷ்டத்தில் உள்ளதால் என்னால் பணம் ரூ.50,000/- ரெடி செய்ய முடியவில்லை என்று எனது சூழ்நிலையை தெரிவித்தேன். அதை கேட்ட அவர் சிறிது யோசித்துவிட்டு, மத்தவங்களுக்கு பில்டிங் கட்ட லைசென்ஸ் குடுக்க ரூ.50,000/- குறைய வாங்குறதில்லை. நீங்க முடியாதுன்னு சொல்றதால உங்களுக்காக ரூ.20,000/- குறைச்சுக்குறேன். இன்னும் ரெண்டு நாளைக்குள்ள ரூ.30,000/- கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்று

சொன்னார். அப்போது பேரக்ஸ் AE ஆபிஸில் தற்காலிக மின் இணைப்பு கொடுக்க NOC கேக்குறாங்க என்று சொன்னேன். அதற்கு அவர் பில்டிங் கட்ட லைசென்ஸ் கொடுத்ததுக்கே நான் கேட்ட பணத்த தரல, இதுல NOC வேறயா, முதல்ல நான் கேட்ட ரூ.30,000/-ஐ கொடுங்க அப்புறம் NOC பத்தி யோசிக்கலாம் என்று சொல்லிவிட்டார். எனக்கு ஜெகதளா பேரூராட்சி EO திரு.சரவணராஜன் அவர்கள் கட்டிட அனுமதி உத்தரவு வழங்கியதற்காக லஞ்சமாக அவர் கேட்கும் பணம் ரூ.30,000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே ஜெகதளா பேரூராட்சியின் EO திரு.சரவணராஜன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். தேதி 28.11.2024 இப்படிக்கு ஒப்பம் (XXXX) 28.11.2024 (A.சுபாஷ் ராஜ் குமார்) Submitted: Received the above complaint on 28.11.2024 at 10.30 hrs and after conducting a discreet enquiry, registered a case in V & AC, The Nilgiris Cr.No.9/2024 u/s 7(b) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 on 28.11.2024 at 11.30 hrs. Sd (XXXX) 28.11.2024 Inspr. of Police, V&AC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

28/11/2024

(P.பரிமளாதேவி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நீலகிரி.